கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பி.ஆர்.ஓ.செந்திலண்ணாவின் தந்தை மன்னார்குடி சேப்பையன் (எ)எல்.ஆறுமுகம் அவர்களின் மறைவையொட்டி, கோவை ராமநாதபுரத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு, வீட்டுவசதித்துறை, நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் சென்று அவரது குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொண்டார். உடன் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் முன்னாள் எம்எல்ஏ. கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன். துணைமேயர் வெற்றிசெல்வன்,மாமன்ற உறுப்பினர் பாபு ஆகியோர் உள்ளனர்.

சேலத்தில் 'நீட்' தேர்வை ரத்து செய்யக்கோரி, திராவிடர் கழக இளைஞரணி,, திராவிடர் மாணவர் கழகம். சார்பில் நடந்த வாகன பரப்புரை நிறைவு விழா பொதுக்கூட்டத்தில். தி.மு.கழக துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி. கலந்து கொண்டு பேசினார். மற்றும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், மாவட்ட தி.மு.க. செயலாளர். இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. மேயர் ஆ.ராமச்சந்திரன் மற்றும் அனைத்துக் கட்சி நிர்வாகிகள் பேசினர்.

அரியலூர் மாவட்டத்தில் ஊரகப் பகுதிகளில் அரசு உதவி பெறும்

தொடக்கப்பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கம்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், ஜூலை 17 -

அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை ஒன்றியத்திற்குட்பட்ட குமிழியம் மங்கையர்கரசி அரசு உதவிப்பெறும் நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஊரகப் பகுதிகளில் அரசு உதவிப்பெறும் தொடக்கப்பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்ட விரிவாக்கத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பள்ளி மாணவ, மாணவியரின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்காகவும், அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். இதன் ஒரு பகுதியாக 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டு நகர்புற உள்ளாட்சி அமைப்பு மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம தொடங்கி வைக்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக உலகிற்கே முன்னோடியான முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தினை ஊரக பகுதிகளில் அரசு உதவிப்பெறும் தொடக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் இன்றையதினம் திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்.

இதன் தொடர்ச்சியாக அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியத்திற்குட்பட்ட குமிழியம் மங்கையர்க்கரசி அரசு உதவிப்பெறும் நடுநிலைப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்ட விரிவாக்கத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் இன்றைய தினம் தொடங்கி வைத்து, மாணவ, மாணவியர்களுடன் அமர்ந்து உணவு சாப்பிட்டார்.

அதன்படி அரியலூர் மாவட்டத்தில் உள்ள 37 அரசு உதவிப்பெறும் தொடக்கப்பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் பயிலும் 3063 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுகின்றனர்.

மேலும் அரியலூர் மாவட்டத்தில் அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட 12 அரசு தொடக்கப்பள்ளிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி பகுதிகளில் உள்ள 477 அரசு தொடக்கப்பள்ளிகள் என மொத்தம் 489 தொடக்கப்பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் செயல்படுத்தப்பட்டு 27,232 மாணவ, மாணவியர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தில் தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டியாக திங்கள் கிழமை ரவா உப்புமா மற்றும் காய்கறி சாம்பார், செவ்வாய் கிழமை கோதுமை ரவா மற்றும் காய்கறி கிச்சடி, புதன் கிழமை வெண் பொங்கல் மற்றும் காய்கறி சாம்பார் வியாழக்கிழமை அரிசி உப்புமா மற்றும் காய்கறி சாம்பார், வெள்ளிக்கிழமை சேமியா காய்கறி கிச்சடி மற்றும் ரவா கேசரி ஆகிய உணவுகள் வழங்கப்படும். அரசு அனுமதித்த பிற சிற்றுண்டி உணவுகளும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கிடைக்ககூடிய காலை உணவினால் கவனக்குறைவின்றி நன்றாக படிப்பதுடன் வேலைக்கு செல்லும் பெற்றோர்களின் குழந்தைகள் இத்திட்டத்தால் மிகுந்த பயன்பெறுவார்கள் எனவே, இதனை பள்ளி மாணவ, மாணவியர் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

முன்னதாக பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 122 ஆவது பிறந்த நாளினை முன்னிட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கங்காதாரிணி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் தேஜாஸ்ரீ, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) சாமி முத்தழகன்,ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் செ.இளஞ்செழியன், மாவட்ட நிலை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள், மாவட்ட , ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருவாரூரில் அரசு உதவி பெறும் பள்ளிகளில்

விரிவாக்கப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட துவக்க விழா!

பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ .பங்கேற்பு!

திருவாரூர், ஜூலை 17 -

உலகிற்கே முன்னோடியான தமிழ்நாட்டை உருவாக்கிய திராவிட நாயகர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனை திட்டமான காலை உணவுத்திட்டம் முதலமைச்சர் அவர்களால் "ஊரக பகுதியில் அரசு உதவிபெறும் தொடக்கபள்ளிகளிலும் விரிவுப்படுத்தி திருவள்ளூர் மாவட்டத்திலிருந்து துவக்கி வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, திருவாரூர் மாவட்டம், திருவாரூர் வட்டம், தப்பளாம்புலியூர் ஊராட்சியில் ஸ்ரீ கிருஷ்ணா அரசு உதவி பெறும் நடுநிலைப்பள்ளியில் விரிவுப்படுத்தபட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடக்க விழாவில் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், மாவட்ட ஆட்சித் தலைவர் சாருஸ்ரீ, நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் ஏ.தேவா ஆகியோர் பங்கேற்றனர்.

முதலமைச்சர் அவர்கள், சட்டப்பேரவை விதி எண்.110ன் அறிவிப்பின் படி, அரசுப்பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை மாணவ, மாணவியர்களுக்கு காலை உணவுத்திட்டம் அனைத்து மாவட்டங்களில் உள்ள அரசுப்பள்ளிகளில் துவங்கப்படும் என தெரிவிக்கப்பட்டதனை தொடர்ந்து கடந்த 15.09.2022 அன்று முதலமைச்சர் அவர்களால் கிராம மற்றும் நகர்புறங்களில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன் முதற்கட்டமாக 16 மாவட்டங்களில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் தொடங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அரசுப்பள்ளிகளில் கடந்த 25.08.2023 அன்று முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டு திருவாரூர் மாவட்டத்தில் கிராமப்புற பகுதிகளில் 750 அரசுப்பள்ளிகளிலும், பேரூராட்சி பகுதிகளில் 27 அரசுப்பள்ளிகளிலும் என மொத்தமாக 777 பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

15.07.2024 அன்று முதலமைச்சர் அவர்களால் ஊரகப்பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவிபெறும் தொடக் கப்பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் தொடங்கி வைக்கப்படுகிறது. திருவாரூர் மாவட்டத்தில், 61 அரசு உதவிபெறும் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் தொடங்கப்பட்டு 4601 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுகின்றனர்.

முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தினால் திருவாரூர் மாவட்டத்தில் ஊரகப்பகுதிகளில் 38,124 மாணவ, மாணவியர்களும், பேரூராட்சி பகுதிகளில் 1,980 மாணவ, மாணவியர்களும் என மொத்தமாக 838 பள்ளிகளில் பயிலும் 40,104 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுகின்றனர்.

காலை உணவுத்திட்டத்தின் சமையல் கூடங்களில் தொடர்புடைய ஊராட்சி மற்றும் பேரூராட்சி பகுதியினை சார்ந்த தேர்வு செய்யப்பட்ட மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் சமையல் கூட பொறுப்பாளர்களாக பணியில் ஈடுபடுகின்றனர்.

அரசுப்பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களை ஊக்கபடுத்திடவும், மாணவ, மாணவியர்கள் இடைநிற்றலை தடுத்திடவும், ஊட்டச்சத்து குறைபாடு இல்லா வருங்கால சந்ததி அமைத்திடவும் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் பெரும் பங்கு வகிக்கிறது.

திருவாரூர் வட்டம், தப்பளாம்புலியூர் ஊராட்சியில் ஸ்ரீ கிருஷ்ணா அரசு உதவிபெறும் நடுநிலைப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு காலை உணவு திட்டத்தை தொடங்கி அவர்களுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் எழுதுபொருட்களை திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் ஒன்றியக்குழு தலைவர் .புலிவலம்.எ.தேவா ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்வில் நகர செயலாளர் வாரை.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், தப்பளாம்புலியூர் ஊராட்சி மன்றத்தலைவர் கணேசமூர்த்தி, ஒன்றியக்குழு உறுப்பினர் நடராஜன் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில்

புதுக்கோட்டை - கந்தர்வக் கோட்டை தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி!

துரை வைகோ எம்.பி. தெரிவித்தார்!

புதுக்கோட்டை, ஜூலை 17 -

திருச்சி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட புதுக்கோட்டை மற்றும் கந்தர்வகோட்டை சட்டமன்ற தொகுதியின் இந்தியா கூட்டணி நிர்வாகிகளுக்கு நன்றி அறிவிப்பு கூட்டமானது, மாலையீடு கற்பக விநாயகா மண்டபத்தில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.கழக செயலாளர், வழக்கறிஞர், கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ கலந்துகொண்டு நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்தார். ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் மாத்தூர் எஸ்.கே.கலியமூர்த்தி வரவேற்புரையாற்றினார். மாநில இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, கந்தர்வ கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னதுரை, புதுக்கோட்டை மாநகர செயலாளர் ஆ.செந்தில், மாநில நிர்வாகிகள் அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், செ.அசோக்பாண்டியன், கே.ஆர்.என். போஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் பி.ராஜேஸ்வரி, க.மதியழகன், எஸ்.எஸ். கருப்பையா, எம்.லியாகத் அலி, , இந்தியா கூட்டணி கட்சிகளின் மாவட்டச்செயலாளர்கள் த.செங்கோடன், எஸ்.கவிவர்மன், இளமதி அசோகன், மு.அறிவொளி, எஸ்.ஏ.முகம்மது அஷ்ரப் அலி, எம்.அப்துல் கனி, எம்.ராஜகோபால், நியாஸ் அகமது, துரைமுகம்மது, முகம்மதுவான், மு.அப்துல் ஐப்பார், கே.கே.கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில், திமுக ஒன்றிய, நகர கழக செயலாளர்கள் மு.க.ராம கிருஷ்ணன், தவ.பாஞ்சா லன், என்.சேட்டு, எம்.பரமசிவம், ஓ.எஸ்.வெங்கடாசலம், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, வெ.முத்துக்கிருஷ்ணன், மா.தமிழ்அய்யா, சி.சண்முகம், ஆர்.ஆர். சாமிநாதன், உ.முருகேசன், ப.அண்ணாத்துரை புதுக்கோட்டை மாநகர மேயர் திலகவதி செந்தில், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயலெட்சுமி தமிழ்செல்வன், புதுக்கோட்டை தொகுதி பொறுப்பாளர் கார்த்திக் வேலுச்சாமி, திருச்சி நாடாளுமன்ற தொகுதி பொறுப்பாளர் டி.பெனட் அந்தோணி ராஜ், கந்தர்வக் கோட்டை தொகுதி பொறுப்பாளர் டாக்டர் செ.குறிஞ்சிவாணன் பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம்.பழனியப்பன், என்.சாத்தையா, இராசு சந்தோஷ், ஆர்.செல்லத்துரை ஆர்.எம்.செந்தில்குமார், சி.ஆர்.வி.சித்ரா மற்றும் எம்.எம்.பாலு, அ.ரெத்தினம், சி.அரங்கநாயகம், கவிவேந்தன், தவசுமணி, ஜெய்ஸ்டாலின், மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன் முத்துச்சாமி, வெற்றிச்செல்வன், ராஜேந்திர சோழன், அஸ்ரப் அலி , வழக்கறிஞர் திருஞான சம்பந்தம், தெய்வானை, ராயல் சபா, பா.ரெங்கராஜ். மா.மணிவேலன், செ.ரமேஷ், பழனிவேலு, மழையூர் ராமசாமி, டி.அப்புக்காளை, மாலையீடு பிரபு, ராஜேந்திரன், முகமது ஆசிப், ராமச்சந்திரன், காதர் கனி, ஏ.கே.அண்ணாத்துரை, ஒன்றிய பெருந்தலைவர்கள், மாவட்ட கவுன்சிலர்கள் மாலா ராஜேந்திரதுரை, சித்ரா ரவிச்சந்திரன், த.செல்வம்,கை.பழனிச்சாமி, எம்.ஏ.எம்.முகமது இம்தியாஸ், எம்.நைனாமுகமது, எம்.கே.அறிவுடை நம்பி, புதுநகர் குமார், முத்துக்கருப்பன் உள்ளிட்ட தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சி நிர்வாகிகள், மாநகராட்சி, ஒன்றிய நகர, பேரூர், உள்ளாட்சி பிரதிநிதிகள், இயக்கங்களின் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள் திரளாக கலந்துகொண்டனர்.

முன்னதாக, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், அண்ணல் அம்பேத்கர் திரு உருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில்

அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலை உணவுத் திட்டம்!

உதயசூரியன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

கள்ளக்குறிச்சி, ஜூலை 17 -

தமிழ்நாடு முழுவதும் அரசு பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர், சமூக நீதி காவலர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் திருவள்ளூர் மாவட்டத்தில் தொடங்கி வைத்தார்கள், இதனை தொடர்ந்து கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய அகரக் கோட்டாலம் ஆர்.சி அரசு நிதியுதவி பெறும் நடுநிலைப் பள்ளி மற்றும் தண்டலை அல் ரஹ்மான் அரசு நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கள்ளக்குறிச்சி ஒன்றிய குழு தலைவர் அலமேலு ஆறுமுகம் தலைமை தாங்கினார்,

மாவட்டக் கல்வி அலுவலர் லதா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செல்வகணேஷ், பூமா ஆகியோர் முன்னிலை வகித்தனர், சிறப்பு அழைப்பாளராக வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், மாவட்ட வருவாய் அலுவலர் சத்யநாராயணன் ஆகியோர் பங்கேற்று காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்தனர்,

இந்நிகழ்வில் தி.மு.க. வடக்கு மாவட்ட துணை செயலாளர் வாணியந்தல் ஆறுமுகம், ஒன்றிய செயலாளர் அரவிந்தன்,பேரூர் கழக செயலாளர் செந்தில் குமார். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அருள், ஒன்றிய கவுன்சிலர்கள் பிரியா ராஜாராம், ரவிக்குமார், அண்ணாமலை, அன்பு, நகுலன், காமராஜ், பள்ளி தாளாளர் சாஜகான். ஊராட்சி மன்ற தலைவர் யமுனா கவாஸ்கர் மற்றும் பொதுமக்கள், பள்ளி மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திருச்சி மாவட்டம் லால்குடி ஒன்றியம் வாளாடி ஊராட்சி கபிரியேல் புரம் புனித கபிரியேல் அரசு உதவி பெறும் நடுநிலைப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு நேற்று முன்தினம் காலை துவக்கி வைத்தார். உடன் திருச்சி மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி லால்குடி ஒன்றிய சேர்மன் ரவிச்சந்திரன், லால்குடி நகர் மன்ற தலைவர் துரை மாணிக்கம், ஆர்.டி.ஓ.சிவசுப்பிரமணியன், தாசில்தார் முருகன், அரசு அலுவலர்கள்,ஒன்றிய செயலாளர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் – முன்னோடிகள் கலந்து கொண்டனர்

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 122ஆவது பிறந்தநாளை முன்னிட்டு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கோவை மாவட்டம் கூலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜல்லிபட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவ – மாணவியர்கள் மற்றும் ஆசிரியப் பெருமக்களுடன் இணைந்து பெருந்தலைவர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தி கல்வி வளர்ச்சி நாளை கொண்டாடினார்.